# Bishop's Message



Dear Fathers, Sisters and Brothers,

Greetings!

I hope that all of you keep fine and stay safe at this time of unprecedented pandemic. The number of Covid 19 infected in our district gradually and steadily increases day by day which becomes cause of our great concern. The normal life of the people has not yet returned and another period of lockdown with a few relaxations is in effect for another month. Although people of all walks of life are affected, it goes without saying, the worst hit in this critical time is the poor and vulnerable people. Our nearness to them by way of prayers and compassionate help in action is much expected and appreciated. I kindly request you to motivate our people to extend their hearts and hands to those in need. Our diocese continues its mission of helping the poor as much as possible as in the past. In the same vein, I also request you to take good care of your safety and health while not forgetting to conscientize our people constantly about the development of the present scenario caused by Corona virus.

At this juncture, I sincerely thank Fr. Maria Vincent Edwin and his collaborators and place on record the online theology course series initiated by our diocesan Christian Life Commission. The first online course for 15 days was conducted on Christology which was regularly and enthusiastically attended by more than 90 people. Thanks to Fr. D. Alphonse for his availability, profound erudition and thorough knowledge of the subject! The second course in the series on the New Testament commences on August 5, Wednesday for a period of 15 days which will be handled by Frs. Raphael, Ubald and Dionysius L. I am happy that a good number of laity are able to attend the courses which otherwise is quite impossible for them

at this time and get benefited. We also hope to go ahead in the future with a course on the Social Teachings of the Church, if time permits. I also thank and appreciate other commissions which have risen to the occasion by means of webinars and online programmes.

The month of August marks two important days for us, Catholics: the feast of St. John Mary Vianney, the patron of priests on 4th August and the solemnity of the Assumption of the Blessed Virgin Mary on 15th August. Annually we come together on the feast of St. Vianney to celebrate the day with our newly ordained priests which is not possible this year. However, it is not impossible for us to wish each other and to pray for each other particularly on that day.

We all know that St.Vianney is known for his ardent devotion to the Virgin Mary and dedicated to the sacrament of reconciliation. His biographers claim that he spoke to Our Lady with devotion and, at the same time, with trust and spontaneity. It is said that he rejoiced in speaking to his parishioners of Mary and never tired of doing so. It seems he would always remind his faithful that "Jesus Christ, after giving us all that he could give us, wanted further to make us heirs to his most precious possession, that is, his Holy Mother." How beautifully his zeal and deep trust shine through the following words: "The heart of this good Mother is nothing but love and mercy, all she wants is to see us happy. To be heard, it suffices to address oneself to her." While wishing you, dear Fathers, a happy feast of St. John Mary Vianney, I also entreat you to entrust ourselves like St. Vianney to the maternal care of the Blessed Virgin, Mother of priests.

In the mind of Christ

-sd-

Bishop Nazarene Soosai
Bishop of Kottar

# DIOCESAN CIRCULAR LETTERS

No. Ch-79/2020 22.07.2020

அன்பு நிறை அருட்பணியாளர்களே!

கோவிட் 19 தொற்று வேகமாக அதிகரித்து வரும் இக்கட்டான சூழலில் பொது வழிபாட்டுக்கான தடையை அகற்றுவது குறித்து மாவட்ட நிர்வாகம் கவனத்துடன் பரிசீலனை செய்கிறது. நாமும் சமூகப் பொறுப்புணர்வுடன் அரசு வழிகாட்டுதல்களுக்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம்.

பல பங்குகளிலிருந்து ஆலயத் திருவிழாவைச் சிறப்பிப்பது குறித்து வழிகாட்டுதல் தேவை என கோரிக்கை வந்துள்ளமையால், வட்டார முதன்மை அருட்பணியாளர் களை ஆலோசித்தபின், பின்வரும் வழிகாட்டுதலைத் தருகின்றேன்.

❖ திருவிழா சிறப்பிக்கப்படுகின்ற நாளுக்கு முந்தைய நாள் மாலை வழிபாடும் திருவிழாவன்று காலைத் திருப்பலியும் சிறப்பிக்கப்படலாம். மாலை வழிபாடு மற்றும் திருவிழா திருப்பலியில் பொதுமக்களின் பங்கேற்பு, தற்போதுள்ள நடைமுறையின்படி, தவிர்க்கப்பட வேண்டும். கொடியேற்ற நிகழ்வும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

மக்களோடு தொடர்பு கொள்கின்ற அருட்பணியாளர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுகின்ற வாய்ப்பு அதிகம். எனவே அருட்பணியாளர்கள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கருத்தோடு பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் பகிர்ந்துள்ளார். முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல்,

கைகளை அடிக்கடிக் கழுவுதல் போன்றவற்றை நமது பழக்கமாக்கிக் கொள்வோம். மக்களும் இப்பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற தொடர்ந்து வலியுறுத்துவோம்.

நோய் அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு இருப்பின், தயங்காமல் கொரோனா தொற்றுக்கான பரிசோதனை செய்திட முன்வருமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து ஆரம்ப சுகாதார மையங்கள், ஆரல்வாய்மொழி சுங்கச் சாவடி, நெய்யூர் CSI மருத்துவமனை, நாகர்கோவில் மோரிஸ் மருத்துவமனை, விவேக் பரிசோதனை நிலையம் ஆகியவற்றில் பரிசோதனை வசதிகள் உள்ளன. நோய் அறிகுறிகள் இருப்பின் மறைமாவட்ட நிர்வாகத்தைத் தயக்கமின்றித் தொடர்பு கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் நமது பொறுப்பினை நாம் ஏற்றுக்கொள்ளவும், அரசு வழிகாட்டுதலின்படி செயல்படுவது விவேகமானது என மக்களுக்கு எடுத்துக் கூறவும், நோய்த் தொற்றுக்கு நாம் ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யவும் கடமைப்பட்டுள்ளோம் என்பதை அன்புடன் நினைவூட்டுகிறேன்.

அனைத்து மக்களும் நலமுடன் வாழ இறைவன் அருள வேண்டுமெனத் தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

Sd/-

+ நசரேன் சூசை

கோட்டாறு ஆயர்

No. Ch-80/2020 31.07.2020

Dear Rev. Fathers,

Greetings.

I wish to inform you that the term of the present Council of Priests (Senate), which was established on 8th August 2017, is extended for a period of three more months till 7th November 2020 as the prevailing situation is not favourable to hold the election for new representatives for the Senate. However, if the situation becomes conducive, the election for the new Council of Priests will be held at an earlier date and you will be given intimation regarding the same.

In the mind of Christ,

Sd/-
+ Nazarene Soosai
Bishop of Kottar

---

## Covid-19 Help to the Distressed Persons : Phase V (Contact through helpline)

| S.No. | Vicariates | No. of families |
|---|---|---|
| 1. | Alenchy Vicariate | **32** |
| 2. | Colachel Vicariate | **315** |
| 3. | Devasahayam Mt. Vicariate | **30** |
| 4. | Kanyakumari Vicariate | **44** |
| 5. | Kottar Vicariate | **86** |
| 6. | Muttom Vicariate | **43** |
| | Total | **550** |

**-Fr. Jeniber Edison K.M.**

No. Ch-81/2020 31.07.2020

அன்பு நிறை அருட்பணியாளர்களே! இறைமக்களே!

கோவிட் 19 நோயால் இறப்பவரது உடலை உரிய மாண்புடன் நல்லடக்கம் செய்வது திரு அவையின் கடமை. தவறான நம்பிக்கைகளும் அவற்றின் விளைவாக மக்களிடம் எழுந்துள்ள அச்சமும் கோவிட் நோயால் இறப்போரை நல்லடக்கம் செய்வதற்குத் தடங்கல் ஏற்படுத்துகின்றது. வீண் அச்சத்தைத் தவிர்த்து, அரசு வழிகாட்டுதலின்படி அடக்கச் சடங்கு நிறைவேற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தேவையற்ற அச்சத்தை அகற்றி, இறப்பவரை நமது கல்லறைத் தோட்டங்களில் அரசு காட்டும் வழிமுறையின்படி நல்லடக்கம் செய்ய ஒத்துழைக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோவிட் 19 நோய்க்கு ஆளானவர், நோயால் இறப்பவர் மற்றும் அவரது குடும்பத்தினர்மீது பரிவு கொள்வோம். இறை உடனிருப்பு தருகின்ற நம்பிக்கையோடு பயணிப்போம்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

Sd/-

+ நசரேன் சூசை

கோட்டாறு ஆயர்

**"சீர்திருத்தத்திலிருந்து மறு ஒருங்கிணைவை நோக்கி"**

# சிறைப்பணி ஞாயிறு 09 ஆகஸ்ட் 2020

## ஆயரின் சுற்றுமடல்

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள இறைமக்களே, அருட்சகோதரர்களே, அருட்சகோதரிகளே, அருள்பணியாளர்களே!

மீண்டும் ஒரு சிறைப்பணி ஞாயிறை இன்று சிறப்பிக்கின்றோம். கொரோனா பெருந்தொற்று நம் வழக்கமானப் பணிச்சூழலையும் கொண்டாட்டங்களையும் பாதித்திருக்கும் இவ்வேளையில் முக்கியமானச் சிலப் பணிகளை வரையறைக்குட்பட்டு நிறைவேற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியே. அவ்வகையில் நமது மறைமாவட்டத்தின் சிறைப்பணிக்குழுவின் சிறை சந்திப்பு, இல்ல சந்திப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள் தடைபட்டிருந்தாலும், மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள சிறைவாசிகளின் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டு உதவிகளை வழங்கியிருப்பது மிகவும் சிறப்பானது. இச்சிறைப்பணி ஞாயிறன்று இப்பணிக்கெனத் தொடர்ந்து ஊக்கமுடன் உதவிட உங்களையும் அன்போடு அழைக்கிறேன்.

இந்திய ஆயர்ப் பேரவையின் நீதி, அமைதி மற்றும் வளர்ச்சிக்கான பணிக்குழு "சீர்திருத்தத்திலிருந்து மறு ஒருங்கிணைவை நோக்கி" என்ற சிந்தனையைச் சிறைப்பணி ஞாயிறுக்கென வழங்கியுள்ளது. முழுமனித வளர்ச்சிக்கான நம் முயற்சிகளைச் சிறைப்பணி வழியாக உறுதியாக மேற்கொள்ள தூண்டுதல் தருவதாக இச்சிந்தனை அமைகிறது. இயேசுவின் இலட்சியப்படி சிறையில் அடைபட்டவர்களும் நம் கரிசனைக்குரிய சகோதர சகோதரிகளே. இன்றைய கொரோனா பெருந்தொற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள அவர்களும், அவர்களுடைய குடும்பங்களும் தம் மறுவாழ்விற்கும், வளர்ச்சிக்கும், மேம்படுத்தப்பட்ட வாய்ப்புகளைப் பெற வேண்டும்.

அவர்களுடைய குற்ற அடையாளம் மாற்றப்படப் பயனுள்ள கல்வி, மதிப்பான வேலைவாய்ப்பு, தரமான

ஆற்றுப்படுத்தல் மற்றும் சமூக ஈடுபாட்டுப் பயிற்சி ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

இப்பணி மிகக் கடினமான பணி என்றாலும் இதன் வழியாகவே அவர்கள் தங்கள் முந்தைய நிலையைவிட மேம்பட்ட நிலையை அடைய முடியும். இதற்கு மாறாக அவர்களுடைய குற்றங்களைக் கருதி அவர்கள் பெற வேண்டிய மதிப்பையும் மாண்பையும் மறுக்கும்போது அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களுக்குத் திரும்பும் வாய்ப்பே உள்ளது. ஏற்கனவே தண்டனை பெற்றவர்களை வெறுப்பதும் ஒதுக்குவதும் சமூகத்தால் வழங்கப்படும் மனித தன்மையற்ற மறுதண்டனை என்றே கருத வேண்டியுள்ளது. இதுவே அவர்களை மீண்டும் குற்றச் சூழலுக்குள் தள்ளிச் சிறை திரும்ப வைக்கிறது எனலாம். இத்தகைய நிலை தவிர்க்கப்பட வேண்டும். நமது சீர்திருத்தப் பணிகள் உணர்வளவில் மட்டும் நின்று விடாமல் அவர்கள் மறுவாழ்வை அடையச் செய்யும் செயல்களாக அமைந்திட வேண்டும். இப்பணியை நம் மறைமாவட்ட சிறைப்பணிக்குழு 7 குழுக்களாக ஒருங்கிணைப்பது மிகவும் சிறப்பானது. “இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்” (லூக் 19:10) என்ற இயேசுவின் அருள்வாக்கை உள்ளத்தில் பதித்து இப்பணிக்கென அர்ப்பணிக்க இறைமக்களாகிய நாமும் சிறப்பாக இளைஞர்களும் முன்வருவோம்.

“நான் சிறையில் இருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்” (மத் 25:36) என்ற இயேசுவின் கூற்றுக்கிணங்க நம் மறைமாவட்டத்திலும், இந்தியா முழுவதும் பணிபுரியும் சிறைப்பணித் தன்னார்வலர்களை மகிழ்வோடு பாராட்டுவோம். செபத்தாலும், பொருளுதவியாலும் இப்பணிக்கான ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவோம். சிறைப்பணியின் பாதுகாவலர் புனித மாக்ஸ்மிலியன் கோல்பே இப்பணியில் நமக்காக எப்போதும் பரிந்து பேசுவாராக.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

+ நசரேன் சூசை
கோட்டாறு ஆயர்

No. C-22 /2020 04.08.2020

இறையேசுவில் அன்புக்குரியப் பங்கு அருட்பணியாளர்களே!

வணக்கம்...! வாழ்த்துகள்...!

"குடும்பம் மனிதனை மாண்புறச் செய்கின்ற பள்ளி" என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம். நமது குடும்பங்கள் திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு வாழ, மறைமாவட்ட குடும்ப நலப் பணிக்குழு திருமணம் நிச்சயிக்கப்பட்ட இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் இரண்டு நாட்கள் எட்டு தலைப்புகளில் திருமண தயாரிப்புப் பயிற்சி வழங்கி வருகிறது.

கொரோனா வைரஸ் தாக்குதலால் தொடர்ந்து நான்கு மாதங்களாக அமுல்படுத்தப்பட்ட முழு அடைப்பு காரணமாக, திருமண முன்தயாரிப்புப் பயிற்சி நடத்த இயலாத நிலை இருந்தது.

இச்சூழலில், மணவாழ்வில் அடியெடுத்து வைக்கும் ஆண்களும், பெண்களும் தங்களை நன்முறையில் தயாரித்துக் கொள்வது இன்றியமையாதது என்பதை உணர்ந்து திருமண முன் தயாரிப்புப் பயிற்சியை இணைய தளம் வழியாக நடத்த மறைமாவட்டக் குடும்ப நலப் பணிக்குழு முடிவு செய்துள்ளது.

எனவே, பயிற்சியில் பங்கேற்பவர்கள் தங்கள் புகைப்படம் ஒட்டிய, பங்கு அருட்பணியாளர் அவர்களின் அனுமதிக் கடிதத்துடன், திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் மறைமாவட்ட குடும்ப நலப் பணியகத்திற்கு வந்து ரூ.400.- கட்டணம் செலுத்தி, பெயர்ப் பதிவு செய்து, பயிற்சியில் பங்கெடுக்க அறிவுறுத்தும்படி மறைமாவட்டத்திலுள்ள அருட்பணியாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். பங்குத்தந்தையர் வழி பயிற்சி சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும்.

இணைய தளம் வழி பயிற்சியில் பங்கேற்பது

தொடர்பான முழு விபரங்களையும் பெயர்ப் பதிவின்போது மறைமாவட்ட குடும்ப நலப் பணியகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பயிற்சி வகுப்புகள் வாரந்தோறும் வெள்ளி, சனி ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறும்.

ஆகஸ்ட் 14, 15 வெள்ளி, சனி ஆகிய நாட்கள் முதல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகும்.

இல்லற வாழ்வில் இறையாட்சி மலரட்டும்...!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

+நசரேன் சூசை

கோட்டாறு ஆயர்

---



## LET US REMEMBER OUR DECEASED PRIESTS

**R.I.P.**

**03 : Fr. Maria Victor Rodrigues (1937)**

**09 : Fr. Michael Cruz (1933)**

**10 : Fr. Peter L. Christian (1978)**

**16 : Fr. Tobias A. (2009)**

**19 : Fr. Vincent Rodrigo E. (2008)**

**21 : Fr. Eugene P. (1995)**

**23 : Fr. Paul Stephen (1957)**

**24 : Fr. Barnabas J. Nevis (1990)**

**25 : Fr. Thomas Fernando S. (1993)**

**26 : Fr. Wenceslaus C.F. (1987)**

# தமிழக இளைஞர்களுக்கு
## (இளைஞர் நாள் 2020)
# வாழ்த்து

என்றும் இளமை நிறைந்த இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே!

எதிர்வரும் ஆகத்து 02ஆம் நாள், ஞாயிறைத் தமிழகத் திரு அவை 35வது உலக இளைஞர் நாளாகச் சிறப்பிக்கின்ற வேளையில் உங்கள் அனைவருக்கும் தமிழக ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்குழுச் சார்பில் இளைஞர் நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நமது உலகத்தின் நிகழ்காலமே இளைஞர்கள்தான்" (கிறிஸ்து வாழ்கிறார், எண். 64) எனக் கூறும் நம் திருத்தந்தை பிரான்சிஸ், அவர்கள்தான் இந்த உலகையும் திரு அவையையும் வளப்படுத்துவதற்கும் உதவுகின்றனர் எனவும் கூறுகின்றார். அவ்வாறு அவர்கள் வளப்படுத்த வேண்டுமெனில் திரு அவையின் உறுப்பினர்கள் இயேசுவின் அணுகுமுறையை எப்போதும் கைக்கொண்டு இளைஞர்களோடு உடன்பயணிக்க வேண்டும். அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளுக்குத் திறந்த மனதுடன் செவிமடுத்துப் பரிவோடு வழிநடத்த வேண்டும். அதைவிட மேலாக, திரு அவையிலும் உலகிலும் அவர்களின் தனித்துவமான இருப்பினை அங்கீகரிக்கவும் அவர்களுடைய பங்களிப்பினைத் தர அனுமதிப்பதும் புதிய சமூக உருவாக்கத்தில் அவர்களின் ஈடுபாட்டினைப் பாராட்டவும் இளைஞர் நாள் உதவ வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் இளைஞர் நாளையொட்டி செய்தியைத் தருகின்ற திருத்தந்தை, இவ்வாண்டு மையச் சிந்தனையாக "இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு" (லூக் 7:14) என்பதனைத் தந்துள்ளார். 'எழு' அல்லது 'எழுந்து நில்' என்னும் வினைச்சொல் 'உயிர்த்தெழுதல்' மற்றும் 'புதிய வாழ்க்கைக்கு விழித்தெழுதல்' என்பதைக் குறிக்கின்றது. கலிலேயாவிலுள்ள நயீன் என்னும் நகரத்துக் கைம்பெண் ஒருவர் தன் ஒரே மகனை இழந்து வருந்திய சூழலில், அப்பெண்ணின்

ஆற்றாமையால் பாதிக்கப்பட்ட இயேசு அவர்மீது பரிவுகொண்டு, “இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு” என்று கூறி உயிர்ப்பித்தார். இன்றும் பல இளைஞர்கள் போதை, குற்றம், வறுமை போன்ற பலநிலைகளில் இறந்தவர்களாக இருக்கின்றனர். பிறர் வலியைத் தன் வலியாக ஏற்றுக்கொண்ட இயேசுவைப் போல, மற்றவர்கள் அனுபவிக்கும் வலியால் தொடப்பட்டு, பரிவு காட்டித் துயர்துடைக்கும் இளைஞர்களாய் நம் இளைஞர்கள் மாறிட வேண்டும். அழுவாரோடு அழுவதும் துன்புறுத்தலுக்கு ஆளாவோரின் காயங்களைத் தமதாக்குவதும் அவற்றை மாற்ற இயக்கமாக இணைந்து முயலும்போதும் இளைஞர்கள் திரு அவையிலும் உலகிலும் நம்பிக்கையின் சாட்சியாகத் திகழ்கின்றனர். இப்பணியில் இளைஞர்கள் தனியாக இல்லை. இயேசுவே இன்றும் அவர்களோடு செயல்படுகின்றார் என நம் திருத்தந்தை அருமையாகக் கூறுகின்றார்.

தமிழகத் திரு அவை இந்த ஆண்டினை “ஆற்றலோடு மாற்றம் நோக்கி” என்னும் மையப் பொருளில் இளைஞர் ஆண்டாகச் சிறப்பிக்கின்ற வேளையில், எதிர்பாராது உலகமே முடங்கியுள்ளது. இந்நிலையிலும் நம் இளைஞர்கள் ஆற்றி வருகின்ற பணிகளை நாம் உளமாரப் பாராட்டுவோம். இளைஞர் இயேசுவைப் போல சிறந்த ஆளுமையில் அவர்கள் வளர உதவுவோம். நிகழ்கால நெருக்கடிகள் நடுவில் துணிவுடன் அவர்கள் செயலாற்றிட வழிகாட்டுவோம். சமூக மாற்றத்தைக் கொணரும் பரிவுள்ள இளைஞர்களாய் உருவாகிட நாம் அவர்கள் உடன் பயணிப்போம்.

இளைஞர் இயேசுவின் ஆசியும் உடனிருப்பும் உங்களோடு என்றும் இருப்பதாக!

அன்புடன்,

Sd/-

ஆயர் நசரேன் சூசை<br>
தமிழக ஆயர் பேரவை<br>
இளைஞர் பணிக்குழுத் தலைவர்

# DIOCESAN CHRONICLES

## JULY, 2020

01 : Bishop meets Vicars Forane and Vicariate office bearers to take stock of Covid-19 situation and elicit opinions for future plans.

12 : Bishop along with diocesan administration receives Thiru. Sreenath IPS at Bishop's House to thank him for his services in the District and to wish him well elsewhere.

13 : Bishop and the VG met the District Collector to express the diocesan concerns regarding treatment to corona patients.

14 : Bishop conducts Extended Curia meeting with the Vicars Forane.

- Bishop conducts the first meeting of the newly constituted Formation Team.

- Bishop chairs the Board meeting of the Diocesan English Schools.

15 : Theology Course (Online Course) on Christology commenced.

Bishop conducts a few sessions in the following days.

19 : Bishop receives Mr. Vijaya Baskar and Mr. Kadampur Raju the State Ministers who paid a brief courtesy visit to Bishop.

25 : Bishop and the Curia visited the newly appointed Superintendent of Police and mutually got introduced.

31 : The Parish Council Office bearers of Vaniyakudy met the Bishop in connection with Covid-19 in the Parish.

# Diocesan Collections

## Communication Sunday
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **324,479** |
| Muttom | 6,460 |
| **Total** | **330,939** |

## Prison Ministry
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **43,613** |
| Muttom | 5,521 |
| **Total** | **549,134** |

## Bible Sunday
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **43,619** |
| Muttom | 7,093 |
| **Total** | **350,712** |

## Mission Sunday
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **2,366,836** |
| Muttom | 48,000 |
| **Total** | **2,414,836** |

## Communio India
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **197,139** |
| Muttom | 4,505 |
| Midalam | 1,560 |
| **Total** | **203,204** |

## Martyr Devasahayam
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **251,466** |
| Muttom | 6,384 |
| Midalam | 2,920 |
| Total | 260,770 |

## Holy Childhood
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **305,031** |
| Muttom | 6,006 |
| Midalam | 2,020 |
| **Total** | **313,057** |

## Delhi Relief
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **266,785** |
| Muttom | 5,647 |
| Midalam | 3,250 |
| **Total** | **275,682** |

## Corona Relief
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| **Carried Forward** | **1,915,155** |
| One Priest from our Diocese | 14,400 |
| **Total** | **1,929,555** |

## Seminary Fund
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| Mr. Eazhil Arasu Arachi, Ponnappa Nadar Colony (Feb. to June) | 5,000 |
| Mr. Artin Gomaz, Puthenthurai | 1,000 |
| Mr. S. Joe, Kanyakumari | 1,000 |
| Mrs. Mettilda Jeya Jothy, Pallavilai | 2,000 |
| Mr. Raj Antony | 1,000 |
| Mr. Franklin Jenifer, Mela Asaripallam | 5,000 |
| Mrs. S. Mary Siriyapushpam, Kurusady | 1,000 |
| Mr. Darney, Thalavaipuram ( June & July ) | 2,000 |
| Mr. L. Weslin C/o V. Mangala Antony Surandern, Muttom | 3,000 |
| Mrs. Mary Emily Prema, Kil Asaripallam (Apr., May & June) | 1,500 |

| | |
|---|---|
| Mrs. Anthonyammal, Kil Asaripallam ( Apr. , May & June) | 1,500 |
| Mr. S. Everest, Kanyakumari | 10,000 |
| Mr. John Mary, Pallam ( Apr. & May ) | 2,000 |
| Mr. Artin Gomaz, Puthenthurai | 1,000 |
| **Total** | **37,000** |

**Parish Contribution**
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| Midalam | 13,000 |
| **Total** | **13,000** |

**Cumulated Masses**
**From June 23, 2020 to July 20, 2020**

| | |
|---|---|
| N.G.O. Colony | 1,000 |
| Kandervilagam | 2,800 |
| Fr. Thiviyan (Apr. & May ) | 5,000 |
| Punnai Nagar | 400 |
| Alanchy | 2,200 |
| Kurusady | 5,700 |
| Fr. Thiviyan (June) | 7,000 |
| Kovalam ( Feb. & Mar. ) | 16,800 |
| **Total:** | **40,900** |

**15.08.2020 : Bishop's House office holiday**

# Greetings and Prayers

## AUGUST 2020

### Birth Days

03 : Fr. Xavier Raja A. (1947)
04 : Fr. Joachim A. (1937)
Fr. Nixson B. (1983)
06 : Fr. Masilamony L. (1938)
08 : Fr. John Bellarmin T. (1963)
09 : Fr. Golridge Jim J. (1976)
12 : Fr. Benjamin L. (1984)
13 : Fr. Arul Joseph I. (1959)
14 : Fr. Johnson S.P. (1965)
15 : Fr. Sebastian S. (1978)
Fr. John Milton S. (1987)
16 : Fr. Dunston A. (1978)
Fr. Merlin Renjith Ambrose A. (1981)
Fr. George Clement M. (1987)
17 : Fr. Maria Gladston G. (1963)
Fr. Ligorius M. (1987)
18 : Fr. John Augustus M. (1967)
19 : Fr. Lawrence S.P.(1972)
21 : Fr. Jelbarin M. (1981)
22 : Fr. John Kennedy A. (1962)
27 : Fr. Jaya Baskar Minto P. (1979)
29 : Fr. Antony Sahaya Anand A. (1977)

### PRIESTLY ORDINATION ANNIVERSARY

29 : Fr. Pascalies V. (1998)

# Sange Muzhangu Library
## (Diocese of Kottar)

We are very happy to bring you tidings of great joy. Our Diocesan Library, named *Sange Muzhangu Library,* will be blessed and opened by our Bishop Nazarene Soosai at 8:00 am on Tuesday, 4th August 2020. The library is situated in the mini hall adjacent to the dining room of Bishop Arockiasamy Animation Centre. At the moment it has about 4,500 volumes on diverse subjects, but mostly on biblical, theological and pastoral themes. The library will function from 9:30 am to 1:00 pm and 2:00 to 5:00 pm. except on Sundays, Thursdays and Diocesan Holidays.

Reading room facility is also available. For the time being books will not be lent outside. It is open to the public also at no cost.

- Fr. D. Alphonse
Director - PPB

---

## *Note of thanks:*

The pains taken by Fr. D. Alphonse the Priests' Personnel Board Director to collect and codify the books are very much appreciated. Prior to appointing a regular staff in the Library, a few other lay women who helped Fr. Alphonse purely on a voluntary basis are also appreciated.

**- KNL**